முந்திரிக்கென ஏற்றுமதி மண்டலம் தமிழகத்தில் கடலூர் மாவட்டத்தில் பண்ருட்டியில் அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

43—

மின் இணைப்புகள்

***1403—திரு. ஜே.சி.டி. பிரபாகர்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம், சிட்கோ நகர் மின் இணைப்புகள் பூமிக்கடியில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெரம்பூர் கோட்டம், சிட்கோ நகர் பிரிவில் சில பகுதிகளில் தாழ் மின்னழுத்தக் கம்பிகளைப் புதைவடமாக மாற்றுவதற்கு உரிய திட்டம் திருத்தியமைக்கப்பட்ட, விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின்கீழ்–Restructured Accelerated Power Development and Reforms Programme தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. உரிய தளவாடங்கள் கிடைக்கப்பெற்றவுடன் மேற்கூறிய வேலைகள் செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள்.*

திரு. ஜே.சி.டி. பிரபாகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த* overhead wires *மேலே செல்வதை* under ground cable–*ஆக மாற்ற வேண்டும், புதைவடங்களிலே மாற்ற வேண்டும் என்று இந்த சிட்கோ நகர் பகுதியிலேயிருந்து பொதுமக்கள் கோரிக்கை மனு கொடுக்க வந்தார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று பொற் காலமான ஆட்சி நடைபெறுகிறபோது மக்கள் எங்களைப் பார்த்து, சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து கேட்பதெல்லாம், இன்று மனு கொடுத்து உடனேயே பதிலை எதிர்பார்க்கிறார்கள். நீங்கள் அம்மா மாதிரி* alert–*ஆக இல்லை* Sir *என்று சொல்கிறார்கள். எவ்வளவு வேகமாக, துரிதமாக சட்டசபையில் அம்மா பேசுகிறபோது உடனுக்குடன் டக் டக் டக்கென்று வேலை செய்கிறார்கள். உடனே திட்டங்களை அறிவிக்கிறார்கள். நீங்கள் வேகமாக இல்லை என்று மக்கள் எங்களைப் பார்த்துச் சொல்கிறார்கள். அம்மாவினுடைய வேகத்திற்கு ஈடுஇணையற்ற அந்த அறிவாற்றலுக்கு முன்னாலே நாங்களெல்லாம் ஒன்றுமில்லை என்பதைப் பொதுமக்களுக்குப் புரிய வைத்து, உங்கள் குறைகளைக் கவனமாகக் கொண்டு போகிறோம் என்று நாங்கள் சொல்கிறோம். இப்பொழுதும் சிட்கோ நகர் பகுதியிலே மொத்தம் 55 தெருக்கள் இருக்கின்றன. 15 தெருக்களிலேதான் வேலை முடிந்திருக்கிறது. 40 தெருக்களிலே வேலை நடக்க வேண்டும். இதே வில்லிவாக்கம் தொகுதி முன்பு புரசைத் தொகுதியிலே பாதியும், வில்லிவாக்கம் தொகுதியிலே பாதியுமாகச் சேர்த்து புதிய தொகுதி* delimitation–*லே உருவாக்கப்பட்டது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே முன்பிருந்தபோது 2001–2006–லே...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.*

திரு. ஜே.சி.டி. பிரபாகர்: *வந்துவிடுகிறேன். 55, 56, 57* division-*களிலே மொத்தம் 99 சதவிகிதம் வேலைகள் முடிந்துவிட்டன. எதிர்க்கட்சியாக இருந்தாலும் அன்றைக்கு அங்கே நமது சட்டமன்ற உறுப்பினர் இல்லாவிட்டாலும்கூட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எல்லோரையும் சரிசமமாகப் பாவித்து, 99 சதவிகித வேலைகள் அங்கே முடிந்துவிட்டன. வில்லிவாக்கம் தொகுதி ஒரு பஞ்சாயத்தாக இருந்த ஒரு பகுதி. 1978–லே பஞ்சாயத்திலே சேர்க்கப்பட்டு இந்த 63–வது வட்டத்திலே, மாண்புமிகு பேரவைத்*

தலைவர் அவர்களே, தாய்மார்களால் துணி காயப் போட முடியவில்லை. பாதுகாப்புக் காரணங்கள் மிகவும் அதிகமாக இருக்கின்றன. மழைக் காலங்களில் நிறைய விபத்துகள் ஏற்படுகின்றன. மின் wire அறுந்து விழுந்துவிடுகிறது. சிறிய குழந்தைகள் மொட்டை மாடிக்கு விளையாடப் போனால் தாயும், தகப்பனும் பதைத்துக் கொண்டிருக்கிறார்கள். நிறைய விபத்துகள் ஏற்படுகின்றன. தமிழ்நாடு முழுவதும் நிறைய விபத்துகள் report–ஆகிக் கொண்டிருக்கின்றன. மரங்கள் வளர்க்க முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கு வாருங்கள்.

திரு. ஜே.சி.டி. பிரபாகர்: வந்துவிட்டேன். கேள்விதான் இது. இப்போது சிட்கோ நகர் பக்கத்திலே இருக்கக்கூடிய Redhills Road 1 முதல் 5–வது தெருக்கள், அகஸ்தீஸ்வரன் கோயில் தெரு, உப்பிலி அம்மன் கோயில் தெரு, தாந்தோனியம்மன் கோயில் தெரு, டி.வி. அம்மன் கோயில் தெரு, பொன்னாங்கிணறு தெரு, சீயாளம் தெரு, ராஜமங்கலம், பாபா நகர், வடக்கு ஜெகன்னாத நகர், பெரியார் நகர், நாராயண மேஸ்திரி தெரு ஆகிய இடங்களிலும் இந்த wires போவது மிகவும் சிரமமாக இருக்கின்றது. மிகவும் narrow lanes–ஆக இருப்பதால் நிறைய சிரமத்திற்கு ஆளாகின்றார்கள். அகலமாக இருக்கிற பாதையிலே மரம் வளர்க்க முடியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து, அந்த இடங்களிலே மேலே சொல்கிற அந்த மின் wire–களைக் கீழே செல்வதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—05

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிவாக்கம், சிட்கோ நகர் பகுதியில் overhead cable–க்குப் பதிலாக underground cable பதிக்கப்படுகின்ற அந்தப் பகுதியிலே மொத்தம் 49 பணிகள் எடுக்கப்பட்டு, அவற்றிலே 13 பணிகள் இதுவரை முடிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 36 பணிகள் முடிக்கப்பட வேண்டியுள்ளன. இந்த 49 பணிகள் தவிர, மேலும் 10 புதிய வேலைகளும் அதிலே சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆக, 13 வேலைகள் முடிக்கப்பட்ட பகுதியை வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011 ஆகஸ்ட் 19]

1. பி. 17 முதல் பி.20 வரை – தொழிற்பேட்டை.

2. வள்ளியம்மாள் நகர்.

3. திருநகர் 15—வது பிளாக் – தெரு 12 முதல் 15 வரை.

4. திருநகர் 17—வது பிளாக்.

5. சத்யா நகர்.

6. சிட்கோ நகர் 9—வது பிளாக்.

7. சிட்கோ நகர் 3—வது பிளாக் – தெரு 24 முதல் 35 வரை.

8. ஜி பிளாக் – அகத்தியர் நகர்.

9. டி பிளாக் – அகத்தியர் நகர்.

10. என் பிளாக் – அகத்தியர் நகர்.

11. பலராமபுரம்.

12. ராமகிருஷ்ணபுரம்.

13. சிட்கோ நகர் – 3—வது மெயின் ரோட்டின் ஒரு பகுதி.

ஆகிய இந்த 13 வேலைகளும் முடிக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 39 பணிகளுக்கான பட்டியல் என்னிடம் இருக்கிறது. அதைச் சொல்ல நேரமாகும் என்பதால், உறுப்பினர் அவர்களிடம் பட்டியலை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்தப் பட்டியலைக் கொடுத்துவிடுங்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *இன்னும் 36 இடங்கள் முடிக்கப்படவேண்டியுள்ளன. அந்தப் பட்டியலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கொடுத்துவிடுகிறேன். புதிய இடங்களையும் விரைவில் தளவாடங்கள் பெறப்பட்டபின், உறுதியாக அந்தப் பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முடித்துக்கொடுக்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள்.*

திரு. ஜே.சி.டி. பிரபாகர்: வணக்கத்திற்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 63–வது வட்டத்தில் இருக்கக்கூடிய எல்லா மின்கம்பிகளையும் மாற்றித் தருவது எங்கள் தொகுதி மக்களுக்குச் செய்கிற பேருபகாரமாக இருக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம், தங்கச்சிமடம் போன்ற பகுதிகளுக்கு, தீவுப் பகுதிகளுக்கு, main land-லிருந்து போகக்கூடிய ஓயர், மின்இணைப்புக் கம்பிகள் தரைக்கு மேலே இருக்கின்றன. இயற்கைச் சீற்றத்தின் காரணமாக, பலமான காற்று அடிக்கும்போது, அந்தக் கம்பிகள் அறுந்து அதன் காரணமாக, இராமேஸ்வரம் போன்ற முக்கியமான நகரங்களில் அடிக்கடி மின்வெட்டு ஏற்படக்கூடிய சூழல் ஏற்பட்டிருக்கிறது. எனவே, மண்டபத்திலிருந்து இராமேஸ்வரம் தீவுப் பகுதிக்குச் செல்லக்கூடிய மின்கம்பிகளைத் தரையின்கீழ், underground–ல் போடுவதற்கு அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, R-APDRP திட்டத்தின்கீழ், இப்போது ஏறத்தாழ 406 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதிலே இப்போது underground cable பதிக்கப்படவேண்டிய நகரங்கள் – சென்னை, கோயம்புத்தூர், மேட்டுப்பாளையம், பல்லடம், சேலம், மதுரை, பழநி, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி மற்றும் திண்டிவனம் ஆகிய ஊர்களில் இப்போது பணிகள் தொடங்கி, சில ஊர்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன, சில இடங்களில் தொடங்கப்படவிருக்கின்றன.

பொதுவாக, மத்திய அரசினுடைய வழிகாட்டுதலின்படி, 30 ஆயிரம் பேருக்கு மேல் மக்கள் வசிக்கக்கூடிய அந்த நகரங்களுக்கு இதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது தமிழகத்தில் 30 ஆயிரத்திற்கும் மேல் மக்கள் தொகை உள்ள நகரங்களில், இப்போது எடுத்திருக்கிற

நகரங்கள் போக, மீதி நகரங்களிலும் படிப்படியாக இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்போது வருகின்றபோது, இராமேஸ்வரம் மக்கள்தொகை 30 ஆயிரத்திற்கும் மேல் இருக்கிறதா, இல்லையா என்பதற்கு என்னிடம் சரியான கணக்கில்லை. ஆக, 30 ஆயிரத்திற்கும்மேல் இராமேஸ்வரம் மக்கள்தொகை இருக்குமானால், நிச்சயமாக இந்தத் திட்டத்தின்கீழ் அது எடுத்துக்கொள்ளப்படும். 30 ஆயிரத்திற்கும் கீழே இருக்குமானால், இந்த நகரத்திற்கு சிறப்பு முன்னுரிமை கொடுத்து, அது ஒரு pilgrim centre, புனிதத் தலம், tourist centre என்பதால், அந்த இடத்திலே underground cable பதிப்பது குறித்து, தனி முக்கியத்துவம் கொடுப்பது குறித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் எடுத்துச் சென்று, அந்த நகரத்திலே மக்கள்தொகைக்கு கட்டுப்பட்டு வரவில்லை என்றாலும்கூட, சிறப்பு முன்னுரிமை கொடுத்து அளிக்கலாமா என்பது குறித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணை பெற்று, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.

முற்பகல் 10–10

திரு. ப. பார்த்தசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விருகம்பாக்கம் தொகுதியில் 130, 131-வது வட்டத்தில் எம்.ஜி.ஆர். நகர், கானு நகர், சூளைப்பள்ளம் ஆகிய பகுதிகளில் மின்சாரக் கம்பிகள் மேலே சென்றுகொண்டிருக்கின்றன. அவற்றை அகற்றிவிட்டு பூமிக்கடியில் cable பதிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூமிக்கடியில் கேபிள் பதிப்பது சம்பந்தமாகத்தான் இப்பொழுது எல்லா விவரங்களையும் சொல்லியிருக்கிறேன். நான் சொன்ன விவரங்களே போதுமானவை என்று கருதுகிறேன். 30,000 மக்கள்தொகைக்குமேல் உள்ள

நகரங்களுக்குப் படிப்படியாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே உங்களுடைய நகரம் வருமானால் இந்தத் திட்டம் விரைவில் அதில் இடம்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பெரம்பூர் தொகுதியில் இருக்கின்ற 1–வது வட்டம், 2–வது வட்டம். எம்.ஆர். நகர், கண்ணதாசன் நகர், கொடுங்கையூர், முத்தமிழ் நகர் போன்ற பகுதிகளிலும்கூட தலைக்குமேல் மின் கம்பிகள் இருக்கின்றன. அங்கே முருங்கை மரம்கூட வைக்க முடியாத சிக்கல் இருக்கிறது. என் வீடு இருக்கின்ற கொளத்தூர் காமராசர் சாலையிலும் மின் கம்பிகள் தலைக்குமேல் போகின்றன. பல இடங்களில் முதல் மாடிகூட கட்ட முடியவில்லை. ஆகவே, மாநகராட்சி எல்லைக்குள் உள்ள எல்லா இடங்களிலும் மின் கம்பிகளை அகற்றி பூமிக்கடியில் பதிக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 40 ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்ட மின் கம்பிகள் பலமுறை பழுதுபட்டு, ஒட்டப்பட்டு, அடிக்கடி தீய்ந்து போகின்றன. ஆகவே, ஏற்கெனவே பூமிக்கடியில் இருக்கின்ற கேபிள்களையும் வேகமாக மாற்றி அமைத்துத் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. அ. சவுந்தரராசன் அவர்களது கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பு. வெற்றிவேல் அவர்கள்.

திரு. பு. வெற்றிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10–வது வட்டத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின்

2011 ஆகஸ்ட் 19]

திருப்பெயரைத் தாங்கியிருக்கின்ற ஒரு நகரிலும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் திருப்பெயரைத் தாங்கியிருக்கின்ற ஒரு நகரிலும் high tension cable இருக்கிறது. அதை தயவுசெய்து மாற்றித் தரவேண்டுமென்று கோரிக்கையாக வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை high tension cable–ஐ புதைவடமாக மாற்றித் தரக் கோருகின்றார். புதைவடமாக மாற்றுவதற்கு உள்ள வழிமுறைகளையெல்லாம் (guidelines), சொல்லியிருக்கிறேன். அந்த வழிமுறைகளுக்குட்பட்டு, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகளை அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை மின்வெட்டு இல்லாத மாநிலமாக அறிவிக்க நேற்றையதினம் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம். ஆகையால், அந்த வகையில் திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், ஆலங்காடு ஊராட்சியில், கிழக்குக் கடற்கரைச் சாலைக்கு இடம் தேர்வு செய்கின்றபொழுது அந்த இடத்திலே குடியிருந்த சுமார் 22 பேர்கள் அப்புறப்படுத்தப்பட்டார்கள். அவர்கள் ஏ.சி.ஆர். சாலையிலுள்ள ஒரு காலனியில் குடியிருக்கின்றார்கள். பல ஆண்டுகள் முயற்சி செய்தும் இன்றுவரை மின் இணைப்பு கொடுக்கமுடியாமல் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மின் இணைப்பு கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கையை விரிவாக மனுமூலமாக அளிப்பாரேயானால்,

அதன்மீது சட்டப்படி என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்குகின்ற தெய்வம், என்னை வாழவைக்கும் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி எனது துணைக் கேள்வியைத் தொடங்குகிறேன். என்னுடைய தொகுதியான நன்னிலம் சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட பல இடங்களில் மின் கம்பிகள் குறைந்த உயரத்தில், தலையில் இடிக்கின்ற அளவில் தொங்கிக்கொண்டிருக்கின்றன. கடந்தகால ஆட்சியில் பயம் இல்லாமல் இருந்தது. ஏனென்றால் மின்சாரம் வரவில்லை. இப்போது மின்சாரம் வந்துகொண்டிருப்பதால் மக்களுக்கு பயம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—15

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதைவடம் பதிக்கப்படுகின்ற பகுதிகளில் நகரப் பகுதிகளைத் தவிர மற்ற பகுதிகளிலேயும் மின் கம்பிகள் தாழ்வாகத் தொங்குகின்றன. அதனால் சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்றும், பல இடங்களிலே இந்தப் பிரச்சினை இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட பிரச்சினை இருக்கின்ற இடங்களையெல்லாம் கண்டறிந்து, அந்த மின் பாதைகளையும் படிப்படியாகப் புதைவடமாக மாற்றுவதற்குப் பதிலாக, அங்கே தொங்குகின்ற அந்தக் கம்பிகளை இழுத்து கம்பிகள் தொங்காமல் நேரடியாகப் போகக்கூடிய அளவிற்கு சரி செய்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பெருமாள் அவர்கள்.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்காடு மலைப் பகுதியில் பல கிராமங்கள் இருக்கின்றன. அது வனப் பகுதியாக இருப்பதால், அடிக்கடி மின்சாரத் தடை ஏற்பட்டு, அந்தக் கிராமங்களுக்குச் சரிவர மின்சாரம் கிடைக்காத நிலையிலே அங்கிருக்கின்ற மக்களெல்லாம், எங்களுக்குப் பூமிக்கடியில் கேபிள்

2011 ஆகஸ்ட் 19]

வயர் மூலமாக மின்சாரம் வழங்கினால் தடையின்றி மின்சாரம் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். எனவே, அந்த வகையிலே இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். எனவே, அந்த மக்கள் பயன்பெறும் வகையிலே அந்தப் பணி செய்து தரப்படுமா என்று கேட்டு, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மலைப் பகுதி கிராமங்களிலே இந்தப் பிரச்சினை அடிக்கடி ஏற்படுகிறது. ஏனென்று சொன்னால், அந்த மின் கம்பங்கள், மின் பாதை செல்லுகின்ற பகுதியிலே ஏதாவது ஒரு மரம் சாய்ந்துவிடுவதாலோ அல்லது மழை நேரங்களில் மரத்தினுடைய கிளைகள் சாய்ந்தாலோ, அடிக்கடி பழுதடைந்துவிடுகின்றன. மழைக் காலங்களிலே காற்று அதிகமாக வீசுகின்ற நேரங்களிலும் மற்றும் இயற்கையான சூழ்நிலைகளின் காரணமாகவும் மின்தடை ஏற்படுகிறது. இதை மாற்றுவதற்கு, அந்தப் பகுதிகளிலே புதைவடம் மூலமாக அந்த வயரைக் கொண்டுசெல்ல முடியுமா, மின் பாதை அமைக்க முடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அங்கேதான் நம்முடைய மத்திய அரசினுடைய தடை வந்துவிடுமே? மக்களுடைய நலன் என்று சொன்னாலே, அதற்கு மத்திய அரசினுடைய தடை automatic–ஆக வந்துவிடும். மத்திய வனத் துறை மற்றும் சுற்றுச்சூழல் துறையினுடைய சட்ட விதிகள் அங்கே வந்துவிடும். வனத் துறைப் பகுதிகளிலே, ஓர் அடி பள்ளம் தோண்ட வேண்டுமென்று சொன்னாலே, வனத் துறையிடமிருந்து அனுமதி பெற வேண்டும். மத்திய அரசின் வனத் துறையினுடைய அனுமதி பெற்றுத்தான் அங்கே அதையெல்லாம் செய்ய வேண்டும். வேலை சிறியதாக இருந்தாலும், அதற்குச் செய்ய வேண்டிய பணிகள், அனுமதி வாங்க வேண்டிய பணிகள் நிறைய இருக்கின்றன. அந்தப் பணிகளில் சற்றுக் காலதாமதம் ஆகிறது. அதற்கு மத்திய அரசின் வனத் துறை எளிதாக அனுமதி கொடுத்துவிடுவதில்லை. அனுமதி கொடுக்க மறுத்துவிடுகிறார்கள். அதனால், இந்தப் பிரச்சினையை எதிர்கொள்வது எப்படியெனில், உடனுக்குடன் ஆங்காங்கே பணியாளர்களை வைத்து, துண்டிக்கப்பட்ட மின்சாரத்தை உடனுக்குடன் சரி செய்யப்படுகின்ற அந்த நிகழ்வுகள்தான், அந்த நடவடிக்கைகள்தான் இன்றைக்கு எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

44—

புறவழிச் சாலை

***672—திரு. ஆர். அருள்செல்வன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகரைச் சுற்றி புறவழிச் சாலை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகரத்திற்குப் புறவழிச் சாலை அமைக்கும் பணிக்கு ரூபாய் 14.16 கோடிக்கு மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்கூறிய தொகை இப்புறவழிச் சாலை அமைக்கப் போதுமானதாக இல்லை என்பதால், ரூபாய் 26.74 கோடிக்கு திருத்திய நிருவாக ஒப்புதல் பெறுவதற்கு பிரேரணை தமிழக அரசிடமிருந்து மைய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.

திரு. ஆர். அருள்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். 14 கோடியே 16 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவையிலே கூறினார்கள். அவர்களுக்கு மிகவும் நன்றி. இருந்தபோதிலும் ஒதுக்கிய தொகை போதிய அளவிலே இல்லை என்று சொன்னார்கள். நான்